<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 219/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சின்ன இருசா | நாள் | 23.01.2024 |
| தகப்பனார் பெயர் | சுருட்டையன் (எ) பூசாரி கவுண்டர் | | |

**<u>4 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

24) என் பிரமாண பத்திரிக்கையில் கூட்டு குடும்பத்தை நான் தான் பாதுகாவலராக உள்ளேன் என சொல்லியுள்ள நிலையில் என் தந்தை உயிருடன் இருந்தபோதே நான் தான் கூட்டு குடும்பத்தை பராமரித்து வந்தேனா என்றால், எங்கள் நிலத்தில் விவசாயம் செய்து, என் தந்தைக்கும், தயாருக்கும் நான் தான் ஜீவனாம்சம் கொடுத்து வந்தேன். என் இளைய சகோதரர் சின்னமுத்து கொலை செய்யப்பட்ட பின்பு மற்ற சகோதர, சகோதரிகளிடம் எனக்கு சுமூக உறவு இல்லை. யாரிடமும் பேச்சுவார்த்தை இல்லையா என்றால், என் மூத்த சகோதரர் மாணிக்கத்திடம் மட்டும் பேச்சுவார்த்தை இல்லை.

25) என் இளைய சகோதரர் சின்னமுத்துவின் மனைவி வெள்ளையம்மாள் என்ன வேலை செய்கிறார் என்றால், கூலி வேலை செய்கிறார். மேற்படி சின்னமுத்து இறந்தததிற்கு பின்னிட்டுதான் வெள்ளையம்மாள் கூலி வேலைக்கு செல்கிறார். வெள்ளையம்மாள் கூலி வேலைக்கு சென்றுதான் தன் குழந்தைகளை வளர்த்தார் என்றால், நாங்களும் அவருக்கு உதவிகள் செய்து வந்தோம். என் தந்தை சுருட்டைகவுண்டர் உயிருடன் இருக்கும் போதே அனைத்து வாரிசுகளுக்கும் திருமணம் ஆகிவிட்டதா என்றால், இல்லை. சிலருக்கு என் தந்தை இறந்ததற்கு பின்னிட்டுதான் திருமணம் ஆனது.

26) என் இளைய சகோதரர் இறப்பதற்கு முன்பு என்ன தொழில் செய்து வந்தார் என்றால், செங்கல் சூலை வைத்திருந்தார். என் பிரமாண பத்திரிக்கையில் சின்னமுத்துவின் குடும்பத்தாரை பாதுகாத்திட வேண்டி என் தந்தை சொத்து வாங்கி 4ம் பிரதிவாதி வெள்ளையம்மாளின் பெயரில் கிரயம் கொடுத்துவிட்டதாக நான்

சொல்லியுள்ள நிலையில், மேற்படி சின்னமுத்துவின் தனிப்பட்ட வருமானத்திலிருந்து மேற்படி சொத்து வாங்கப்பட்டது என்றால், சரியல்ல. மேற்படி சொத்து என் தந்தையால் வெள்ளையம்மாளின் பெயரில் கிரயம் பெறப்பட்டது. மேற்படி சின்னமுத்துவிற்கு எந்த வயதில் திருமணம் ஆனது என்றால், எனக்கு சரியாக நினைவில்லை.

27) மேற்படி சின்னமுத்து இறக்கும் பொழுது அவருக்கு எவ்வளவு வயதிருக்கும் என்றால், சுமார் 25 வயதிற்கு மேல் இருக்கும். மேற்படி சின்னமுத்து கொலை செய்யப்பட்டது தொடர்பாக குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றதா என்றால், நடைபெற்றது. ஆனால் மேற்படி வழக்கில் போதிய சாட்சி இல்லையென விடுதலை செய்யப்பட்டது. மேற்படி கொலைவழக்கு சங்கதிகள் குறித்து என் பிரமாண பத்திரிக்கையில் நான் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை.

28) மேற்படி சின்னமுத்துவின் மனைவி வெள்ளையம்மாளுக்கு என் தந்தையால் கிரயம் கொடுக்கப்பட்ட நிலத்திற்கான சர்வே எண் குறித்தோ, விஸ்தீரணம் குறித்தோ, ஆவண எண் குறித்தோ இவ்வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால், சரியாக நினைவில்லை. மேற்படி வெள்ளையம்மாளுக்கு என் தந்தை எழுதிவைத்தாக சொல்லும் சொத்தை இவ்வழக்கில் காண்பித்துள்ளோமா என்றால், சொத்து நேரடியாக வெள்ளையம்மாளின் பெயரில் என் தந்தையால் கிரயம் பெறப்படவில்லை. முதலில் மேற்படி என் தந்தை கிரயம் பெற்று என் இளைய சகோதரர் சின்னமுத்துவின் பெயரில் எழுதிவைத்துவிட்டார். அவர் இறந்த பிறகு சின்னமுத்துவின் மனைவி வெள்ளையம்மாள் தன் பெயரில் அந்த சொத்தை மாற்றிக்கொண்டார். மேற்படி சொத்தின் விவரத்தை இவ்வழக்கில் காண்பித்துள்ளேனா என்றால், காண்பித்துள்ளேன்.

29) என் வழக்குரையில் மேற்படி சொத்து நேரடியாக வெள்ளைம்மாள் பெயருக்கு எழுதிவைத்தாக சொல்லியுள்ளேனா அல்லது சின்னமுத்துவின் பெயருக்கு எழுதிவைத்ததாக சொல்லியுள்ளேனா என்றால், தற்போது எனக்கு சரியாக நினைவில்லை. நேரடியாக என் தந்தை கிரயம் பெற்று கொடுத்ததாக எழுதியிருந்தால், அது தவறானது என்றால் சரிதான்.

30) நான் சொல்வது போல் என் தந்தை சுருட்டையக் கவுண்டர் சின்னமுத்துவிற்கோ, அவரது மனைவி வெள்ளையம்மாளுக்கோ எந்த சொத்தையும் வாங்கி கொடுக்க வில்லை என்றாலும், மேற்படி சொத்தை இவ்வழக்கில் காட்டாமல் இருக்க வேண்டி என் தந்தையால் சின்னமுத்துவின் குடும்பத்தை பராமரிப்பதற்காக மேற்படி சொத்து கிரயம் வாங்கப்பட்டதாக நான் சொல்கிறேன் என்றால், சரியல்ல.

31) சின்னமுத்து உயிருடன் இருந்தபோதும், அவர் இறந்த பின்னும் சின்னமுத்துவின் குடும்பத்தை வெள்ளையம்மாள்தான் பராமரித்து வந்தார் என்றாலும், அவருக்கு குடும்பத்தை பராமரிக்க நான் உதவியதாக சொல்வது பொய்யானது என்றாலும், சரியல்ல.

(4 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.